Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 589/2025 PW-2**

Name : சிவக்குமார்
Father / Husband name : சீதாராமன்
Village : கோனேரிக்குப்பம்
Age : 42
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 20.02.2026

Accused present. Defence cousnel present. HC 711 present.

**முதல் விசாரணை**

நான் விவசாய வேலை செய்துவருகிறேன். சாட்சி சண்முகம் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 23.12.2024 அன்று காலை சுமார் 8 மணிக்கு நங்குணத்தில் உள்ள அம்மன் பிளாட் வழியாக நான் சென்றபோது ஒலக்கூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக வந்து அங்குள்ள இடங்களை பற்றி என்னிடம் விசாரித்து வரைபடம் வரைந்து எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் சண்முகம் என்பவர் கையொப்பம் செய்தார். **பார்வை மகசரில் உள்ள சாட்சியின் 1வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு படித்துள்ளேன். எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற முழுவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 எனது நண்பரா என்றால் இல்லை, எனது பக்கத்து வீட்டில் உள்ளவர். எதிரிக்கும் அ.சா.1க்கும் முன்விரோதம் இருந்து பேச்சுவார்த்தை இல்லை என்றால்

சரிதான். போலிசார் என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். எனக்கு சம்பவயிடத்தில் நிலம் கிடையாது என்றால் சரிதான், எனது நண்பர் பெருமாளின் நிலம் உள்ளது. பெருமாளை கேட்டால் நான் அன்றையதினம் சென்றேனா என்று தெரியவரும் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கவில்லை, அ.சா.1 உடன் காவல் நிலையத்திற்கு சென்று எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 கேட்டுக்கொண்டதால் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வரைபடத்தில் வலது பக்கத்தில் யார் யார் நிலம் உள்ளது என்றால் சரவணன் என்பவரின் சவுக்குத்தோப்பு உள்ளது. மனைப்பிரிவு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வடமேற்கு திசையில் யார்யார் நிலம் உள்ளது என்றால் தெரியாது. போலிசார் கேட்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.